உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விடோபா
மும்மணி மாலை.

இஃது

ஆரணி பாலகவிராஜபண்டிதர்

திருவாளர் ஆ. மா. சிவஞான முதலியார்

அவர்களால் பாடப்பெற்றது.

ஆரணி :

அமெரிக்கன் ஆற்காட் மிஷன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1927 [அணா 2

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விடோபா மும்மணி மாலை.

இஃது

வாலாஜா முனிஸிபல் ஹைஸ்கூல்

தமிழ்ப்புலவர் திருவாளர் ஆ. கமலநாத முதலியார் அவர்களின்

பௌத்திரரும்,

ஆரணி போர்டு ஹைஸ்கூல்

தமிழ்ப்புலவர் திருவாளர் ஆ. மாசிலாமணி முதலியார் அவர்களின்

புத்திரரும்,

ஷை ஹைஸ்கூல் பிரதம போதகாசிரியர்

கவிராஜமாகேசரி

பிரம்மஸ்ரீ M. S. மீனாட்சிசுந்தரம் அய்யர் B. A., L. T.,

அவர்களின் பாதசேகரருமாகிய

ஆரணி பாலகவிராஜபண்டிதர்

திருவாளர் ஆ. மா. சிவஞான முதலியார் அவர்களால்

பாடப்பெற்றது.

முதற் பதிப்பு—1000 சுவடிகள்.

ஆரணி:

அமெரிக்கன் ஆற்காட் மிஷன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1927.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சாத்துகவி.

இந்நூலாசிரியர் அருங்கலை விநோதத்திற் பெரும்பொழுதகற்ற

வுறும் துணையாயமர்ந்த ஆரணி தமிழ்ப்புலவர்

திருவாளர் K. M. சுப்பராய செட்டியாரவர்கள் பாடிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

1 திருமருவு பங்கயமின் கயம்பொலியுந்
தேம்பொதும்பர் திகழும் போளூர்
தருமரிய தவப்பயனே யோருருவாய்ச்
சார்ந்ததெனச் சதுர்வே தாந்தப்
பொருளறிந்து தத்துவத்தி னியல்கடந்து
மயலொழிந்து பொலியு மேலாந்
தெருணிறைந்து பானடிசேர்ந் தின்பமுறு
விடோபாநற் சிவஞா னிக்கே

2 பூமாது மகிழ்ந்துறையும் பொலிவவிரு
மாரணியிற் பொருந்து மேன்மை
நாமாது குலவியசீர்ப் புலவோர்கள்
நிலவுகுல நலத்தின் மேவி
காமாரி யிறையடியை யிறையுமன
மறவாத கவிஞ னெங்கள்
தேமாரும் புகழ்மாசி லாமணிசெய்
நற்றவத்துச் சேயாஞ் செம்மல்

3 தவஞான மலிபுலவோ ருரைகலையோ
டிலக்கணநூற் றகைமை யோர்ந்து
நவமான நாற்கவிசொல் பாலகவி
ராஜனெனு நாமம் வாய்ந்தோன்
சிவஞான முயர்பெயரோன் சிவபரனை
மறவாத சிந்தை யாளன்
பவமான மயலறமும் மணிமாலை
யணிந்தனன்தாள் பணிந்து மன்னே.

91/1

உ

தமிழ்மயம்

தமிழ்த்தா யிணைத்தாட் சந்ததம் பணிவாம்.

முன்னுரை.

உள்ளத்தருளுந் தெய்வமு முடையீர்!

சென்ற வருடம் மே, ஜூன் மாதங்களின் இடையில் ஓர் உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டு போளூருக்குச் சென்றிருந்தேன். சென்ற இரண்டொரு தினங்களுள் ஒருநாள் மாலை எனக்குற்ற குறைந்த ஊதியத்தையும் மற்று மிருந்த வமைதியையும் ஆய்ந்து எதிர்காலத்து நமது வாணாள் என்னவாமோவென வுன்னி வுன்னிப் பெரிதுங் கவன்ற வுள்ளத்தனாய், ஆழ்ந்த நோக்கத்துடன் அவ்வூர் வயற்புறத் துலாவியிருந்தேன். ஆண்டுத் திருவருளின்படி எதிர்பாராமலே எனது முன்னேற்றத்தையே நெடிதுங் கண்ணிய புண்ணிய சீலராம் திருவண்ணாமலை வக்கீல் ஸ்ரீமான் S. G. கோபால முதலியார் B. A., B. L., அவர்களைக் கிடைக்கப்பெற்றுப் பேருவகை யெய்தி யளவளாவி னேன். பிறகு யாங்கள் அன்றவ்வூர்க் கெழுந்தருளிய திருவண்ணாமலை டிப்டி கலெக்டர் சைவத் திருவாளர் S. பாண்டியன் அவர்களிட மடைந்தோம் அதன்மேல் இன்னுஞ்சில பெரியோருடன் வெளிப்போந்தோம். செல் வுழி யின்னதென வறியேனாயினும், அவர்களைத் தொடர்ந் தேன். முடிவில் ஓர் கோவிலை யடைந்தோம். அதுவே ஸ்ரீ விடோபா வடிகளின் மணிமந்திரம்.

டிை கலெக்டரவர்களின் வருகையை எதிர்ப்பார்த் திருந்த அக்கோயிலுக்குரியோர் வருவார்க்கிருக்கை யமர்த் தி யாவரையு மெதிரேற்றனர். தீபாராதனை முதலியன வெகு சிறப்புடன் நடந்தேறின. அஞ்ஞான்று அடியேன் மஞ்சை நேருற்ற மஞ்ஞை யனைய விஞ்சிய வுவகையனாய் உள்ளம் பரவசமாய் உடலிற் புளகம் போர்ப்ப நெடும் புதையடைந்த மிடியினனொத்து இந்நூலின் 2, 5, 7 என் னும் இலக்கங்களமைந்த கட்டளைக் கலித்துறைகளை டிை

யடிகளார்த் திருமுன்னருரைத்து மகிழ்ந்தேன். அப்பொழுது என்மீது பெருஞ்சுமை யிருந்து கழிந்ததுபோல் தோன்றிற்று. திருநீறு வழங்கப்பெற்றதன் பின்னர் அனைவரும் இருக்கையெய்தி ஒருவரோடொருவ ருசாவியுரையாடியிருந்துழி "ஸ்ரீவிடோபா சுவாமிகள் சரித்திர" மெனப் பெயரிய வோரரிய நூல் யாவர்க்கும் வழங்கப்பெற்றது.

அந்நூலில் கவிசாகரப் பெருந்தகையும், மகா வித்வ சிரோமணியுமாகிய, எம்மானார், முத்தமிழ் ரத்நாகரம் சைவஸ்ரீ ம. தி. பானுகவி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய "ஸ்ரீ தோபா சுவாமிகள் சரித்திர" மென்னும் எழினலங் கெழிய தமிழ் மணங்கமழு மமிழ்தினு மினிய பனுவலின் போக்கும், மொழிகளும், அடிகளுமே ஆங்காங்கு அமைந்திருத்தலைக் கண்டு பேருவகை பூத்தேன். அந்நூலியற்றிய போளூர் வித்வான் அ. த. அரங்கசாமி நாயகர் அவர்கள் பால் இதைக்குறித் துரையாடிய வக்கால் அவர் மேற்படி தோபா சுவாமிகள் சரித்திரத்தைக் கண்டதில்லையென்றும், இத்தகைய ஆன்றோராட்சிகள் பிறண்டு வந்துளதெனத் தமக்குத் தெரியவே தெரியாதென்றும் விளம்பினார். ஓரோ வழியன்றிப் பெரும்பாலும் இங்ஙனமமைதல் வியப்பினும் வியப்பே.

நிற்க, மற்றொரு நாள் காலை அடியேன் ஷடி யடிகண் முன்னே திருவருள் வயத்தால் என்னையறியாது உடனே பாடிய அக்கட்டளைக் கலித்துறைகளைக் கேட்ட அன்பர்கள் பாராயணத்திற்காக அங்ஙனமே இன்னுஞ் சில பாக்கள் விடோபா மீது எழுதுமாறு கூறினர். அதற்குவந்து அந்நாள் மாலையே இறைவனருளால் இம்மாலையை விரைவிற்பாடி யினிது முடித்து ஷடி ஆலயத்தில் நண்பர் சிலர்க்கிடையே அரங்கேற்றினேன்.

அடியேன் ஆரணிக்கு மீண்டு வந்த மறுநாள் மாலை கோட்டையிலுள்ள கோரியிடத்து (Kelliey's tomb) எங்கள் உயர்தரக் கல்லூரித் தலைவராகிய A. சிங்கம் அய்யங்கார் B A., L. T., அவர்கள், அத்தண்ணொழின் மாலையிலொண் கதிர் பரப்பிய விண்மீனடுவண் வெண்மதிபோலத் தம்மை யடுத்தார் பலரும் புடைசூழ வீற்றிருந்தார். அடியேனண்டண்மிப் போளூரில் நிகழ்ந்தனவாகிய இச்செய்திகளைச் சொல்லி மகிழ்ந்தேன். யாவருங் களித்தனர். அக்

91/1

குழுவில் ஒருவராய் விளங்கிய ஆரணி வக்கீல் சைவத்திருவாளர் C. நாராயணசாமி முதலியார் அவர்கள் இவையனைத்தும் செவியேற்றுச் சில செய்யுட்களைக் கூறுவித்து அவற்றிற்குப் பலபடப் பொருளுரை வகுத்து உள்ளம் பூரித்து, அகங்குளிர்ந்து தழைத்த மாலைப்போதில் நிறைமனத்தோடு என்னையளியுடன் நோக்கி விடோபாவருளால் எனக்கு யாவுங்கைகூடுமாறு வாழ்த்துரை வழங்கினார். அங்ஙனமே எனது நன்முயற்சிகண் முழுதும் முட்டின்றி முற்ற முடிந்தன. அவை யின்னின்னவென்பதனை யீண்டு விரிவஞ்சி விடுத்தேன். பிறகு இந்நூலை அமயநேர்ந்துழி வெளியிடலாமென் றிருந்திப்போது வெளியிட்டேன்.

இதையச்சிடுதற்குக் கீழ்க்குறித்த கனதனவான்கள் ஸ்ரீ விடோபாவடிகள் மீதிருத்திய உண்மை யன்பினைப் புரந்தருவதின் அறிகுறியாய் எனது பொருளில் புன்மொழியைப் புறக்கணியாது பொருளுதவி புரிந்தனர்.

அவர்கள் :—

ஸ்ரீமான். தம்மண்ணா A நடேச செட்டியார்,
பட்டு ஜவுளி மளிகை, ஆரணி.

,, S. A. மீனாட்சிசுந்தர முதலியார்,
நூல் மளிகை, சைதாப்பேட்டை, ஆரணி.

,, K. M. K. அண்ணாமலை செட்டியார்,
பட்டு ஜவுளி மளிகை, ஆரணி.
(ஆரணி நகர்ச் சங்க அங்கத்தினர்.)

,, N. அப்பாவு செட்டியார், போளூர், ஆவர்

போளூரில் இன்னுமோரன்பர் சிறிது பொருளுதவினார்.

அவர் பெயர் நினைவிலில்லை

(முதற்பணமுதவியவர்க்கு அவரவர் தொகைக்கேற்ற எண்ணிக்கையமைந்த இந்நூற்சுவடிகள் அனுப்பப்பெறும்)

இவர்களுள் ஸ்ரீ தம்மண்ணா நடேச செட்டியாரவர்கள் இதை யச்சிடுவதற்குத் தாமே பரிந்து பொருளுதவியது மல்லாமல் அடியேனது புன்மதி விளங்குஞ் சொன்

மலி நாலாம் முருகவேண் மும்மணிக்கோவை யெனும் பனுவலைத் தமது பொருட் செலவிலேயே அமயநேர்ந் தழி வெளியிடுவதாய் அன்பார்ந்த வாக்குறுதி அளித்துளார். இவர் தமிழ்மாட்டிறுத்திய பேரன்பு என்றும் போற்றற் பாலேத்து இத்தகைய தனவந்தர் நம்மூரில் நிறைய வுள ரேல் ஆரணி தமிழ் மகட்காங்கு என்று தொன்றுதொட்டு வரும் வழக்குரை என்று நிலைநிற்குமென்க.

இன்னும், இதைப் பதிப்பிக்கக் கைம்மாறு கருதாமற் பொருளுதவி புரிந்த புண்ணிய பூமான்களது தமிழபிமான மும் உதாரமும் என்றும் மறத்தற்பாலனவன்று. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும் வானகமும் மாற்றலரிதாத லால் இவர்கள் தீர்க்காயுளுந்தேகாரோக்யமும், பல்வளனும் நல்லறனுந் துய்த்துப் பெருவாழ்விற் றழையுமாறு தோன் ருத் துணையின் துணைமலரிணைத்தாண் முக்காரணங்களாற் றொழுவதன்றி பொளியேனால் இயற்றற்பாலது வேறியாது!

மற்றும், முற்றத் துறந்து பற்றற்றிலங்கும் பரமஞானி யர் இறைவனின் உயர்ந்தோர் என்பதும், அன்னோர் இன் னருள் வயத்தால் இருவினை யிரியுமென்பதும் அறிஞர் கூற்றுகலான் அடியேன் ஸ்ரீ விடோபாவடிகளை இங்ஙனம் பனுவல் பாடிப் பரவுவதில் வழுவின்றென யாவர்க்குங் கவன மூட்டுகிறேன்.

கல்வியறி வொழுக்கங்களான் ஆன்றமைந்த சான்றோர் இதிலுள்ள குற்றங்குறைகளைப் பொறுப்பாராக.

எனது முன் னேற்றம் இன்னதென நன்குணர்ந்த மேலோர் என்னை யெனது முயற்சியிற் சிறிதுந் தளர்வுறா வண்ணம் ஊக்கி முற்படுத்துவாராக.

இங்ஙனம்,

25—2—27,
பானுகவீச
நிலையம்,
ஆரணி.

பொய்வாய் மாக்களுட் கைவாய்ப் பெருமான்

ஆ. மா. சிவஞானம்.

சிவமயம்.

சரவணபவனு ரிணையடி சரணம்.

சிறப்புப் பாயிரம்.

இந்நூலாசிரியரது மாணவருளொருவரும், ஆரணி நூல் மனிகை

திருவாளர் S A. ஆலாலசுந்தர முதலியார் அவர்கள்

புதல்வருமாகிய திருவாளர்

S. A. மீனுட்சிசுந்தர முதலியார் அவர்கள்

பாடிய

தரவு கொச்சகம்.

1. பூவியனுன் முகனருளும் புனலுலகிற் பொருவிலதா
யோவியமென் மடக்கொடியா ரொளிர்கழங்கம் மனையடுவிண்
தாவிய நீண் மணிமாடந் தங்குபொழிற் போளூரில்
மேவிய சீர் மோனநிலை வித்தகனுய் மன்னிடுவோன்;

2. நத்துலாந் திரையுததி நானிலமார் மானிடர்தந்
தத்தெலாங் கழற்றிநிதஞ் சாந்தநிலை யடைவித்துச்
சித்தெலாம் விழைந்துபணி செய்திடவே வீற்றிருக்கும்
வித்தெலாம் வல்லபுகழ் விடோபாநல் லடிமலர்க்கே;

3. எத்திக்கு மிசைமணக்கு மெழில்கெழிய தமிழ் மொழியில்
தித்திக்குந் தீந்தேனே ! செழுங்கரும்போ ! நறும்பாகோ !
சித்திக்கும் பத்திரசந் திகழமுதோ ! வெனப்பலவாய்
நத்தித்தம் மனமார நாவலர்பா வலர்போற்ற;

4. நயம் பொதிந்த கவிவாணர் கண்டுமனங் கனன்றிடவே
நயம்பதிந்த விலக்கணமு மிலக்கியமு நன்றொளிர
வயம்பெருகு பலவணிகண் மணிகளென வனிமிளிர
வியம்பரு மும்மணிமாலை சூட்டினன்யா ரவனென்னில்;

5. ஆசிலா மறைச்சிலம்பே யலம்புமலர்ச் சேவடியான்
தேசுலா மதிமௌலிச் சிதம்பரனை நிதம்பரவி
யேசிலா வெழிற் றமிழ்க்கோ ரிருநிதியாய் வதிந்திடுநம்
மாசிலாமணிப் புலவன் மாதவமே வடிவானோன்;

6. செந்தணலோம் பர்தணர்தந் திலகமென கிலவிடுவோன்
மந்தணமோ டாங்கிலமும் வண்டமிழுந் தேர்ந்தீண்டு
வந்தணவு மீனாக்ஷி சுந்தரன்றன் மலரடியே
சிந்தனைசெய் வந்தனையான் செழுங்குவளை மலர்மார்பன்;

7. சங்கத்தோ டமர்ந்தபிரான் சாற்றுமறைக் கரியான்றா
னங்கத்தோ னெனவமர்ந்தே யாய்ந்தபுகழ் வேய்ந்ததமிழ்ச்
சங்கத்தோ ருரைத்தமொழிச் சாகரமே மாந்திமலந்
தங்கத்தோ மறநிறுத்துந் தகைமைசெறி புலமையினேன்;

8. சேர்ந்திடு மாணவர்தமது செறிந்தவகப் பணைதிருத்தி
யார்ந்திடுபோன்பெனுமோ ரரும்புனலைப் பாய்ச்சியருள்
கூர்ந்திடு செந்தமிழ்ப் பயிரைக்குலவி வளர்த்திடு முகிலாய்
வார்ந்திடுசொற்கடலாளன் வளர்சைவத் துறையாளன்;

9. சதமகனுஞ் சதுமுகனுஞ் சந்ததமு வந்திறைஞ்ச
விதமருளு மொருபோத னிருபோதை முப்போது
மிதயமதி னிதம்பதிக்கு மெழிலாள னியம்பரு சீர்
உதய பாற்கர கவிஞ னெனவுலகோ ருரைத்திடுவோன்;

10. அகழ்வான நதிதவழு மடர்சடிலப் பரனடியே
புகழ்மோன நிலைசெறியும் புலவர்குழாத் தினிதுறைவான்
மகிழ்வான நெறியினில்யான் வளர்தமிழை நனியோரத்
திகழ்ஞான மருளிடுசீர் சிவஞான தேசிகனே.

பிழை திருத்தம்

முன்னுரை முதற்பக்கத்தில் 10வது வரியில் உன்னி உன்னி என்பதை வுன்னி யுன்னி எனவும்,

" " 11வது வரியில் ஆவ்லூர் என்பதை அவ்லூர் எனவும்,

" " 15வது வரியில் கோபால முதலியார் என்பதைக் கோபாலசாமி முதலியார் எனவும்,

நூல் 7வது பக்கத்தில் 16வது வரி 25வது வெண்பாவில் போமே என்பதைப் போமோ? எனவும் திருத்தி யிருத்துக.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விடோபா மும்மணி மாலை.

காப்பு.

நேரிசை வெண்பா.

உன்னற் குவப்பூறு மூழ்வினைபோ முட்கொள்ள
வின்னற் பவப்பிணியே யிற்றொழியும்—நன்ன
ரகமோடை யாம்பலளிகைலை யார்சீர்
திகமோடை யாம்பலளி தேன்.

ஆசிரியர் வணக்கம்.

நேரிசை வெண்பா.

சித்திரம்வித் தாரமெனச் செப்புங் கவிதையெலா
மெத்தினமுமோர்நொடிக்குள்யான்பாடும்-சித்தியருள்
தய்யனை மீனாட்சிசுந்தரனை வண்மை செறி
அய்யனை வாழ்த்தினே னுய்ந்து.

நூல்.

நேரிசை வெண்பா.

தேனே யனையவெழிற் செஞ்சொற் புசிபாயா
மானு வமுத மளித்தவொரு—வானேனம்
மெண்ணமெலா நல்கருளா னெம்மான் விடோபாவே
யண்ணலெனக் கொண்டே னறிந்து. 1

கட்டளைக் கலித்துறை.

அன்பின் வடிவே யருளின் றெருளே யடியருள
வன்பின் னிருட்குப் பகலவ னேயெனை வாழ்கவெனத்
துன்பின் றளிகூர்விடோபா வெனுமொரு தூமணியே
நின்பொன் னடியே தொழுதே னெனக்கரு ணித்தியமே 2

நேரிசையாசிரியப்பா.

நித்திலத் திரணனி தத்துந் திரைக்கட
லெழுமலை விழுமிய முழவொலி யியைக்க
மூங்கிலி னிசையிழிந் தாங்கெனச் சுருதி
யிரும்பொழிற் சுலவுஞ் சுரும்பின முரலக்
கூத்திய ரென்னக் குலமயி லால
வன்னப் பொலிவுறு மன்னப் பெடைகண்
முருந்தெனப் பதிந்த திருந்தெயிற் றரிவையர்
தளர்நடை விளக்கிக் கிளர்வுறு தோற்ற
மின்னும் பலநல மன்னும் பெருமைப்
புன்னையம் பொதும்பர்ச் சென்னையம் பதிவாழ்
நிலம்புரந் திடுமிறைக் குலம்புரிந் திடுதவப்
பேறாய் மருவிய சீரா ரொருவ
ஞாகாசிப் பெயர் நற்றவக் கோமான்
புண்ணிய வடிவாய் நண்ணிய முதலே!
வளமை செறிந்த விளமை மறந்து
தடையறப் பிணிக்கும் விடையத் தொடக்கிற்
பிரியந் துறந்து துரியஞ் சிறந்த
மோனம் விரிந்த ஞானந் தெரிந்து
நீளார் சீர்த்திப் போரு ளமர்ந்த
புனிதா! வினைவேற் கினிதே யருளாய்
நறுமணங் கமழ்தரு நளின
விரைகழற் கடிமை விரைந்தெனைக் கொண்டே. 3

நேரிசை வெண்பா.

கொன்றை முடியான் குரைகழற்கே சித்தந்த
மொன்று விடோபா வுவகைமிக—வென்றுந்
தவமுடையோ ரேத்துந் தகைசே ரொருவ
னவனடியே யுன்னு மகம். 4

கட்டளைக் கலித்துறை.

அகழுங் கடற்புவி நீயன்றி வேறொன் றறிகிலன்யான்
மகிழுங் கலையுடன் செல்வமுந் தய்த்தன் மலரடிக்கே
நெகிழும் படிமனந் தந்தென்னை யாளாய் நெடியவெழிற்
றிகழும்புகழ்சேர்விடோபா'வென்ஞானசிகாமணியே 5

நேரிசையாசிரியப்பா.

மணி நகைத் துவர்வா யணியிழை யொருத்தி
யாசாங் கத்தொழி லார்ந்தவன் மனையைச்
சிறிதுணு நல்கெனச் செங்கையிற் காட்டவந்
நங்கைதன் கொழுநன் புங்கவர்க் கரிதாய்க்
கெழுதகை நின்னைப் பாழ்தக மெண்ணிச்
சீற்றத் துடன்புன் மாற்றங் கிளப்பி
யடித்தற் கெழுங்கை மடித்தற் கின்றி
நலிமனங் கவலுந் தனிவினை ஞான்றி
விடமர் தருநின் பீடினைத் தெரிந்தே
யஞ்சித் திகைத்தன் கஞ்சத் திருவடி
சென்னிக் கணிந்து பன்னிப் பணிந்து
தன்பந் தணந்து பேரின்பம் மணந்து
விளங்கின னென்னுங் களங்கமில் செய்தி
கேட்டுளங் களித்துக் கிளந்தமற் றம்ம!
வணங்கி நின்புகழை வாழ்த்தின னடியேன்
சிறிதருட் கடைக்கண் செய்தருள் புரியாய்
மன்னிய வளனெலா மல்கவும
தீங்குறு மிடும்பையு நீங்கவு மின்னே. 6

நேரிசை வெண்பா.

மின்று மணிமாட மேவுதிருப் போளூரின்
மன்னுமொருபெரியோய்! மாதவத்தோ — ருன்னும்
பரமா! விடோபா! பதமிறைஞ்சி னேனென்
வரமே மகிழ்ந்தருள வா 7

கட்டளைக் கலித்துறை

வாடும் பயிர்க்குப் புயலே யனைய வளவனென்னைச்
சாடும் பவமே தெறுஞ்சீ ருடைய தயாபரனும்
நீடும் புகழோன் விடோபா நிதமும் நிமலர்முடி
சூடும் பதமே யலதில்லை வேறு துணையெனக்கே 8

நேரிசையாசிரியப்பா

1 கேழ்கி ரிருசுடர் சூழுறு மேருச்
சிலையெனப் பிறங்கெழி னிலைகிளர் தலைவ!
விடோபா வெனுமொரு விளம்பரு பெரும!
வாளொளி மாடப் போளூ ரமர்ந்த

களமறு பெருமைக் களவறு புனிதர்
மம்மர் நோய் தெறுமுன் செம்மலர்ச் சேவடி
யுவாமதி தோறுந் தவா தருச்சித்துப்
போற்றி யிறைஞ்ச வீற்றிருந் தனையால்
என்னுஞ் செய்தி யின்னும் பற்பல
கேட்டக மகிழ்ந்தனன் கிளப்பரு
வையகம் புகழ்ந்து வழுத்துவை பவமே. 9

நேரிசை வெண்பா.

பவமே புரிந்து பழவினையே யொன்றி
யவமே யுழல்வ தகற்றித்—தவமே
விரிந்த புகழான் விடோபா வடியே
பரிந்து மனமே நீ பற்று. 10

கட்டளைக் கலித்துறை.

பத்திச் சுவை மிகப் பாடிப் புகழ்ந்துன் பதமலரே
நத்தித் துதிக்கு மலனின்றி ஞெய்போலிந் நானிலமீ
தெத்திக் கிணுந்திரிந் தின்னற் படுவே னெனையருளாய்
முத்திக் கொருவ! விடோபாவெனுமோர் முழுமுதலே!

நேரிசையாசிரியப்பா.

முதுமறை தெரிந்து பதுமத் திருந்த
நான்முகன் வகுத்த நானிலப் பரப்பின்
மன்னிய வுயிரின முன்னிய வாமெலா
நல்கிப் பழவினை யொல்கித் தொலைவுறத்
தடம் பொழிற் போலூந ரிடம்புரிந் தொளிரு
முத்திக் கிறைவ! வித்தைக் கொருவ!
தோதா வெனுமெழிற் போதா! வெளியேன்
செருக்குறு மும்மலத் திமிரந் தீர்ந்துன்
புனிதஞ் சிறந்த பொன்னடித் தொழும்பர்
குழுவிற் கலந்து வாழவற் றிலங்கக்
கடைக்கண் சிறிதே கணிப்பாய்
விண்ணவர் புகழும் பண்ணவ வீண்டே 12

நேரிசை வெண்பா.

வீண ருடன்கூடும் வெய்ய வினையொருவி
வேண தளிக்கும் விடோபாவை—மாணமரு
முத்தனை யஞ்சலென முன்னின் றிடரொழிக்குஞ் 13
சித்தனை யேத்துநெஞ் சே.

கட்டளைக்கலித்துறை.

சேயே றுயர்ந்த பெருமா ளொளியிற் றினமுமிளிர்
நீயே களைக ணெனக்கெனக் கொண்டு நிதம்புகழ
நாயே னுவக்கும் வரமே புரிந்து நலனருளாய்
தாயே யனைய விடோபா! கருணைத் தடங்கடலே! 14

நேரிசையாசிரியப்பா.

கடற்றிரை யதனினு முடற்றுறு வெந்துய
ராற்றுபு வருந்திக் கூற்றுக் கிரையா
நீர்மேற் குமிழி நிலையழி யுடலினேன்
விடோபா வென்னுமொரு மேதகு பெரும!
நலமுறச் சற்றே நல்காய்
கருதரும் பெருமைக் கருணைநனி பூத்தே. 15

நேரிசை வெண்பா.

பூதலமே யேத்துறுசீர்ப் போளூர் விடோபாவே
ஆதரவோ ருட்கொள் ளருமருந்தே—மாதவனே
நித்தமிரு தாளை நினைந்து பணிந்தனனுன்
வித்தமருள் ஞானகுரு வே 16

கட்டளைக்கலித்துறை.

வேதா கமங்க ணெடித்தே தெரிந்து விதிமுறையின்
மாதா ரணியிற் புகழோ டிருந்து வனசமலர்ப்
பாதா! வமலா! விமலா! விடோபா! பரம! வென
ஓதா தவரைத் தொடர்ந்த பவமே யொழிவிலையே.

நேரிசையாசிரியப்பா.

இலைத்தொழி லயில்வே லெழிற்காத் தவனை
நிகருறு கலையும் புகாறு தேசு
மளகைக் கிறையெனப் பளகறு வளமையும்
புரந்தா னனைய நிறைந்த பல் போகமுந்
தந்தே முடிவி னந்தா வின்ப
முத்திக் குறுவழி சித்தித் திடவருள்
செய்யும் விடோபாத் திருத்தாட்டுணையே
புணை யெனப் பற்றிப் போற்றின்
போழில் வாழ்விற் பொருத்துவன் மன்னே 18

நேரிசை வெண்பா.

மன்னுங் கதிவழங்கி மாறீர்த் தருளுமெழின்
மன்னன் விடோபா மலரடியே—யுன்னிமிக
நன்ன ருறுமனமே நாடொறுநீ வாழ்த்தாம
லின்ன லடைந்துழல்வ தென் 19

கட்டளைக்கலித்துறை

என்முன் றவத்தி னுருவே விடோபா வெனுமிறையே
யுன்முன் னடியே னுறும்பொழு தும்ப ரொளிர்மதியந்
தன்முன் குமுதமுந் தாயெதிர் சேயுந் தாங்கமெழும்
என்முன் கமல மெனவும் மலர்வ தெனதுளமே. 20

நேரிசையாசிரியப்பா.

மேதகு சீர்த்திக் கேதமில் பெரும!
விடோபா வெனுமெழில் வித்தக! வடியேன்
பிறர்மகிழ்ந் தென்னைப் பெரிதும் புகழச்
செய்வகை யுளுற்றுங் கைதவக் கொடியேன்
எய்திய வெய்துய ரிரித்தருள் புரிந்து
தம்மை வியக்கும் வெம்மை யுளத்துக்
கல்வி சாலாக் கயவர்தம் முறவால்
வருதுயர் மாற்றிப் பெரிதவிர் சீர்த்தி
அன்பெனக் கனுதின மருளாய்
வழுத்தரு நினது மலரடி மாட்டே 21

நேரிசை வெண்பா

மாய பவக்கடலை மாயக் கடந்திடுதற்
காய புணைபா யமர்ந்ததே—தூய
வொருத்தன் விடோபா வுலகநித மேத்திக்
கருத்தி லிருத்துங் கழல் 22

கட்டளைக்கலித்துறை.

கயலே பழித்து வலமே விழைத்த கலகவிழி
மயலே விரித்த மடவா ரிடத்து மகிழ்ந்தவர்தஞ்
செயலே புரிந்து திரிந்தே னெனையுன் றிருவருளுக்
கயலே விடாம லுவந்தாள் விடோபா வருளுருவே 23

நேரிசையாசிரியப்பா.

உருவளர் கமலத் திருவொளிர் மார்பன்
கஞ்சத் தவிர்மறை யஞ்சொற் பிரமன்
முதலிய வமரர் பதமல ரிறைஞ்சிப்
பாடிப் பணிந்து நாடற் கரியா
னிருவினை யிரிக்கு மொருவனை யிருத்திப்
பொன்றுப் பெருங்களிப் பொன்றுந் திருவுளத்
தொருவா வின்பத் திருவா ரொருவ!
விடோபா வெனுஞ்சீர் விமல வடியேன்
மும்மலத் துழலும் வெம்மை நீங்கி
யருங் கலை பயில வருளாய்
சொல்லற் கருநின் னல்லருள் துய்த்தே 24

நேரிசை வெண்பா.

துய்ய வளமருவித் தோற்றத் துடனிருந்து
வைய மதினனியே வாழ்ந்திடினும்—வெய்யதுயர்
பண்ணுமலம் போமே பரமவிடோ பாவடிகள்
தண்கமலஞ் சூடார் தமக்கு. 25

கட்டளைக் கலித்துறை.

தன்னே ரிகந்த பெருமான் விடோபாத் தளிரடிக
ளென்னே ரமுமேத் திடுவோ ரிடர்க ளிரிந்துலகின்
மன்னே யனைய வளனோ டிருப்பர் மருவுகமற்
கென்னே தளர்வ செழிலோ டுறுவ ரிருங்கதியே 26

நேரிசையாசிரியப்பா.

கதிர்மதி மிலைந்த முதிர்மறைக் கடவுள்
தனைநிகர் விடோபாத் தாளிணை யிறைஞ்சி
வினைபுரி வெந்துயர் வெல்லுவர்
உனற் கரும் பெருமை யுயர்ந்தோர் தாமே. 27

நேரிசை வெண்பா.

தானே வலிந்தென்னைத் தன்மயமா யாக்கிமிக
ஆனே யிழைத்திடுமிவ் வூழ்வினைக்கு—யானேங்கி
வந்தேன் விடோபா மருவு மாணின்ற
னந்தா மரையடியே யாம் 28

கட்டளைக்கலித்துறை

ஆனே றுயர்த்த விறையோ னமர்ந்த வறிவுருவே
தேனே யினிய கனியே திருவமு தேகரும்பே
வானே யருளு விடோபா வெனுமொரு மாதவனே
கோனே நினையா னினைவே னிதமுங் குணக்குன்றமே. 29

நேரிசையாசிரியப்பா.

குன்றம் பிளந்த வென்றிக் கதிர்வேன்
முருகற் பயந்த வொருவற் கனுதின
மன்னுபே ரன்பின் மனனவிர் பெரும!
அடியேன் வேண்டுவ தளித்திடு மிறைவ!
விடோபா வெனும்புகழ் விமல கேண்மதி
யேத்தருஞ் சீர்த்தி யோத்து ரமர்ந்து
வளமலி தருசீர்ப் பலகலைப் பரப்பி
நல்லோ ருளமலர் நலம்பெற வலர்த்தித்
தென்றமி ணறுந்தேன் றிகழ்வுறப் புரிந்தே
யடர்தரு மகவிரு ளகன்றிட வருளி
யேதங் கிளக்கும் வாதக் குறும்பர்
தம்மை யடக்குந் தகைமை சான்று
செந்தமி ழுலகிற் றினகர னாகிய
செம்மாண் பவிரும் பெம்மா னெம்மா
னென்னுளங் குடிகொண் டிரும்பய னளிக்குந்
தண்ணருட் கடலென் கண்ணொளி யொண்மணி
மோன மேவிய பானுமாகவி
யென்னு மாதவன் றன்னை நிகர்த்த
புலமை மன்னும் நிலைமை துன்னி
விழுப்பஞ் சான்ற வொழுக்கம் மேவி
நின்மல வடியிணை நித்தமு மேத்து
மன்பின் வடிவா யடியனு நிற்க
வின்னருள் புரிகுவை யென்றே
பரம! வுன்னைப் பணிந்துவந் தேனே! 30

விடோபா மும்மணிமாலை

முற்றிற்று.

அமெரிக்கன் ஆற்காட் மிஷன் அச்சுக்கூடம்,—ஆரணி.

ஒரு வேண்டுகோள்.

தமிழ்மொழியை மிகு விழைவுடையீர்!

1909ம் வருடம் வெளிவந்த காமக்கூர் என வழங்கும் "காமநகர்ப் புராண வசனம்" எனும் நூலினுக் கிணங்க இந்நூலாக்கிய எனது ஆசிரியர் சிறந்த செந்தமிழ்ச் செய்யுள் நடையில் பொருள் நயம் சொன்னய மிலங்கவும் தமிழ் நயம் ததும்பவும் காமநகர்ப் புராணம் என எழுதியுள்ளார். இன்னும் சிற்சில சருக்கங்கள் ௸ கத்திய ரூபத்தில் விடுபட்டிருக்கின்றன வென்றும், அவை எவ்விடமோ பழய சுவடியிலுளவென்றுங் கேள்விப்பட்டு, அவற்றையும் பெற்று ௸ புராணத்தின் குறையை நிரப்பி அச்சிடலாமென நிறுத்தியுள்ளார். தங்களிடம் அச்சுவடி யிருப்பினும் இருக்குமிடம் தெரியினும் எனக்காயினும், எனதாசிரியருக்காயினும் அறிவித்து உபகரித்துதவுமாறு வேண்டுகின்றனன்.

இங்ஙனம்: அடியேன்,
S. A. மீனாட்சி சுந்தரம்,
சைதாப்பேட்டை, ஆரணி, N. A.

தமிழில், ஆங்கில நூற்களை மொழிபெயர்க்கவும், உரைநடை நூற்களெழுதவும், பதிகம், அந்தாதி, மாலை, கலம்பகம், தலபுராணம், பிள்ளைத்தமிழ் முதலியவை பாடவும், கழகங்களில் விரிவுரை நிகழ்த்தவும், இந்நூலாசிரியரை விரும்புவோர் அறிய அவர் இருப்பிடம் இங்கே குறிக்கப்பெறுகிறது.

பாலகவிராஜ பண்டிதர்
ஆ. மா. சிவஞான முதலியார்,
பானுகவிசநிலையம்,
கோபால முதலி வீதி, ஆரணி, வடாற்காடு ஜில்லா.

என்றெழுதுக.